செ.வெ.எண்.402 நாள்: 12.08.2017

**காஞ்சிபுரம் மாவட்டம் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாணவ-மாணவிகள் பங்கேற்ற சிறப்பு பட்டிமன்றத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.**

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா தமிழக அரசு சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் விழா ஏற்பாடுகள் பிரமாண்டமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் 30.08.2017 அன்று வண்டலூர், கிளாம்பாக்கம், புதிய புறநகர் பேருந்து நிலைய முனையத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவினையொட்டி தமிழ்வளர்ச்சித் துறை சார்பில் பெரிய காஞ்சிபுரம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், மாணவ-மாணவிகள் பங்கேற்ற சிறப்பு பட்டிமன்றத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது,

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் குழந்தைகள் இடத்தில் மிகவும் அன்பு செலுத்துபவர். மாணவ-மாணவிகளின் கல்வி அறிவினை மேம்படுத்துவதில் அக்கறை கொண்ட காரணத்தினால் தான் நகர்புறம் மட்டுமின்றி ஊரகப் பகுதியில் பயிலும் மாணவ-மாணவிகளும் பயன்பெறும் வகையில் சத்துணவு திட்டத்தை கொண்டு வந்தார்கள். இத்திட்டம் இந்தியாவிற்கே முன்னோடி திட்டமாகும். இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களும் இத்திட்டத்தை பின்பற்றும் வகையில் அமைந்த ஒரு உன்னத திட்டமாகும். அதானல் தான் 'பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் சத்துணவு திட்டம்' இன்று வரை தமிழக அரசால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கல்வித்துறையில் இத்தகைய புரட்சிகரமான திட்டங்களை கொண்டு வந்த பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவை போற்றும் வகையில், அவரது நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அவரது நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இக்காலத்தில் மாணவர்கள் நன்கு கல்வியறிவை பெற்று வாழ்வில் முன்னேற்றமடைந்து, பல்வேறு சிறப்புகளை பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

பட்டிமன்றம் நடுவர் முனைவர்.வே.அருட்மாமணி தலைமையில் "பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மிகவும் நேசித்தது அரசியல் துறையையே! திரைப்படத் துரையையே" என்ற தலைப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வாலாஜாபாத் திரு.பா.கணேசன், திரு.வி.சோமசுந்தரம், முன்னாள் மாவட்ட ஊராட்சித் தலைவர் காஞ்சி பன்னீர் செல்வம், தமிழ்வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் திருமதி.தி.உமா, பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.